**செய்தி வெளியீடு எண் : 275** **நாள்: 25.02.2022**

## செய்தி வெளியீடு

கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், ஆழியாறு படுகை பொள்ளாச்சிக் கால்வாய் 'ஆ' மண்டலம், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் 'அ' மண்டலம், சேத்துமடைக்கால்வாய் 'ஆ' மண்டலம் மற்றும் ஆழியாறு ஊட்டுக்கால்வாய் 'ஆ' மண்டலப் பாசன நிலங்களுக்கு ஆழியாறு அணையிலிருந்து 15.10.2021 முதல் 26.02.2022 வரை 135 நாட்கள் பாசனக் காலத்தில் மொத்தம் 80 நாட்களுக்கு 2573 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்துவிட ஏற்கெனவே ஆணையிடப்பட்டு அதன்படி தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. தற்பொழுது ஆழியாறு அணையிலிருந்து ஆழியாறு படுகை பாசனத்திற்கு 26.02.2022 –க்கு பிறகு நீட்டிப்பு செய்து தண்ணீர் திறந்து விடக் கோரிய ஆழியாறு படுகை புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நலச் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று, ஆழியாறு அணையிலிருந்து ஆழியாறு படுகை பாசனத்திற்கு 27.02.2022 முதல் 31.03.2022 முடிய கால நீட்டிப்பு செய்து, 836 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 22322 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**சந்தீப் சக்சேனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**